<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

அ.சா. 1 தேதி.21.11.2023

| SC. No. | 32/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | வேம்பு | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1, 3, 4 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் கழுகாணிமுட்டம், பாடாசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிபுரிந்து வருகிறேன். சாட்சிகள் வைத்தியநாதன் மற்றும் சரஸ்வதி எனது பெற்றோர்கள் ஆவார்கள். சாட்சி சுபாஸ்னி எனது அக்கா ஆவார். ஆஜர் எதிரிகளையும், 2 ஆம் எதிரியும் எனக்கு தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் புகார்வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி கையெழுத்தை நான் மருத்துவ மனையில் சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்து எழுத்திக் கொண்டு கையெழுத்து கேட்டதும் போட்டு கொடுத்தேன். 14.09.2021 அன்று காலை எனது அம்மாவிற்கும் எங்கள் வீட்டின் எதிர் வீடு பாலகிருஷ்ணன் மனைவி கலாவதி என்பவருக்கும் குப்பை கொட்டுவது சம்பந்தமாக காலையில் பிரச்சனை வந்தது. அது பேச்சு வார்த்தையில் முடிந்தது. பின்னர் அன்று மாலை 4.30 மணியளவில் பாலகிருஷ்ணன் மகன் மகாலிங்கம் அவரது 4, 5 நண்பர்களை அழைத்து வந்து எங்கள் வீட்டு வெளிபுற கேட்டை உதைத்து உள்ளே வந்து வீட்டு வாசலில் இருந்த என்னையும், எனது அக்காவின் பங்களையும் உதைத்து தள்ளிவிட்டு எனது அக்கா சுபாஸ்னியை இரும்பு பைப்பால் ஓங்கி அவரது தலையில் மகாலிங்கம் என்பவல் குச்சிகாரி, தெவிடியா என்று திட்டி இத்தோடு ஒழிந்து போ என்று சொல்லி அடித்தார். அதில் எனது அக்கா மயங்கி விழுந்துவிட்டார். எங்களது சத்தம் கேட்டு உள்ளே இருந்த எனது அப்பாவும், அம்மாவும் வெளியே வந்த போது எதிரி ராஜ்குமார் அருவால் கொண்டு எனது அப்பாவின் தலையின் நடுவிலும், வலது இடது

பக்கங்களிலும் ஓங்கி வெட்டிவிட்டார். தடுக்க வந்த எனது அம்மாவை விக்னேஷ் என்பவர் ஓங்கி அருவால் கொண்டு தலையின் நடுவில் வெட்டிவிட்டார். அவர்கள் இருவருக்கும் தலையில் இரத்தம் வடிந்து வந்தது. எனது அம்மா மயங்கி விழுந்துவிட்டார். ஹரிஹரன் என்பவர் கட்டையால் எங்கள் நான்கு பேரையும் மாரி மாரி அடித்தார். என்னை முதுகிலும், காலிலும் மாரி மாரி அடித்தார்கள். எனக்கு இரத்த காயம் எதுவும் அடிப்படவில்லை. மகாலிங்கம் சொல்லி தான் ஹரிஹரன் கட்டையால் அடித்தார். நாங்கள் யாரும் குடும்பத்தோடு உயிரருடன் இருக்க கூடாது என்று மிரட்டினார்கள். மேலும், குச்சிகாரி, தேவிடியா, கூட்டி கொடுத்த குடும்பம் என்று காமகுரோதமாக திட்டினார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்த உடன் எதிரிகள் ஓடிவிட்டார்கள். பக்கத்தில் உள்ள பிரகாஷ் என்பவர் கார் வைத்திருந்தால் அவரை நான் அழைத்து வந்து எனது பெற்றோர்கள் மற்றும் அக்காவை அந்த காரில் ஏற்றி மருத்துவ மனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவ மனையில் போலீசார் வந்த விசாரணை செய்தார்கள். புகார் வாக்குமூலத்தை நான் அங்கு தான் கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ சா ஆ 1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான இரும்பு பைப்பினை எதிரி மகாலிங்கம் பயன்படுத்தியது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான சின்ன அருவாளை விக்னேஷ்ம், பெரிய அருவாளை ராஜ்குமாரும் பயன்படுத்தியது ஆகும். அந்த தடய பொருட்கள் முறையே சா.பொ. 1 முதல் 3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை செய்யவில்லை.</u>

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.

<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>
<u>முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,</u>
<u>முதன்மை சார்பு நீதிபதி</u>

அ.சா. 2 தேதி.21.11.2023

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 32/2023 | | |
| பெயர் | வைத்தியநாதன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1, 3, 4 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

<u>சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை</u>

நான் கழுகாணிமுட்டம், பாடாசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் கார் ஓட்டுநராக வேலை செய்து வருகிறேன். சாட்சிகள் வேம்பு மற்றும் சுபாஸ்னி எனது மகள்கள் ஆவார்கள். சாட்சி சரஸ்வதி எனது மனைவி ஆவார். ஆஜர் எதிரிகளையும், 2 ஆம் எதிரியும் எனக்கு தெரியும். 14.09.2021 அன்று செவ்வாய் கிழமை காலை எனது மனைவிக்கும் எங்கள் வீட்டின் எதிர் வீடு பாலகிருஷ்ணன் மனைவி கலாவதி என்பவருக்கும் குப்பை கொட்டுவது சம்பந்தமாக காலையில் பிரச்சனை வந்தது. அது பேச்சு வார்த்தையில் முடிந்தது. பின்னர் அன்று மாலை 4.30 மணியளவில் எதிரிகள் அனைவரும் எங்கள் வீட்டிற்கு வந்து வீட்டின் வெளியே இருந்த எனது இரண்டு மகள்களிடமும் பிரச்சனை செய்ததார்கள். சத்தம் கேட்டு வீட்டின் உள்ளே இருந்து நானும் எனது மனைவியும் வந்த பார்த்த போது எனது பெரிய மகள் சுபாஸ்னியை மகாலிங்கம் என்பவர் குச்சிகாரி, தேவிடியா என்று திட்டியபடி இவள அடித்து கொல்லுங்கடா என்று அடித்ததில் அவர் மயங்கி கடந்தார். என்னையும் ராஜ்குமார் பெரிய அருவால் கொண்டு எனது தலையில் இரண்டு இடத்தில் வெட்டினார். பிறகு எனது மனைவியை எதிரி விக்னேஷ் என்பவர் அருவால் கொண்டு தலையில் ஒரு முறை வெட்டினார். எனது மனைவியின் பின்கழுத்தில் அருவாளால் தாக்கியதில் தற்போது வரை அவருக்கு சிகிச்சை எடுத்து வருகிறோம். மகாலிங்கம் இரும்பு ராடால் பெரிய மகளின் வலது காலில் அடித்து அவருக்கு எலும்பு முறிவு ஏற்படுத்தினார். மகாலிங்கம் என்னை அசிங்கமாக குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே, கூட்டு கொடுத்த பய என்று சொல்லி அடித்து

கொல்லுங்கடா என்று கூறினார். எனது சிறிய மகள் வேம்புவை எதிரி ஹரிஹரன் கட்டையால் அடித்தார். மயிலாடுதுறை அரசு மருத்துவ மனையில் சிகிச்சைக்காக எங்களை பிரகாஷ் என்பவரின் காரில் அழைத்து வந்து சேர்த்தார்கள். பிறகு மேற் சிகிச்சைக்காக மயக்கத்தில் இருந்த என்னையும், எனது மனைவியும் திருவாரூர் மருத்துவ கல்லூரி மருத்துவ மனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனது மகள் வேம்பு தான் தெளிவாக இருந்தால் அவர் தான் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான இரும்பு பைப்பினை எதிரி மகாலிங்கம் பயன்படுத்தியது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான சின்ன அருவாளை விக்னேஷ்ம், பெரிய அருவாளை ராஜ்குமாரும் பயன்படுத்தியது ஆகும்.

<u>குறுக்கு விசாரணை செய்யவில்லை.</u>

முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

அ.சா. 3 தேதி.21.11.2023

| SC. No. | 32/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | சுபாஸ்னி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1, 3, 4 எதிரிகள் ஆஜர். 2 ஆம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கழுகாணிமுட்டம், பாடாசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் வங்கியில் பணிபுரிந்து வருகிறேன். சாட்சிகள் வைத்தியநாதன் மற்றும் சரஸ்வதி எனது பெற்றோர்கள் ஆவார்கள். சாட்சி வேம்பு எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரிகளையும், 2 ஆம் எதிரியும் எனக்கு தெரியும். 14.09.2021 அன்று காலை எனது அம்மாவிற்கும் எங்கள் வீட்டின் எதிர் வீடு பாலகிருஷ்ணன் மனைவி கலாவதி என்பவருக்கும் குப்பை கொட்டுவது சம்பந்தமாக காலையில் பிரச்சனை வந்தது. அது பேச்சு வார்த்தையில் முடிந்தது. பின்னர் அன்று மாலை 4.30 மணியளவில் பாலகிருஷ்ணன் மகன் மகாலிங்கம் அவரது 4 நண்பர்களை அழைத்து வந்து எங்கள் வீட்டு வெளிபுற கேட்டை உதைத்து உள்ளே வந்து வீட்டு வாசலில் இருந்த எனது தங்கையும், எனது குழந்தைகளையும் உதைத்து தள்ளிவிட்டு என்னை இரும்பு பைப்பால் ஓங்கி அவரது தலையில் மகாலிங்கம் என்பவர் குச்சிகாரி, தெவிடியா என்று திட்டி இத்தோடு ஒழிந்து போ என்று சொல்லி அடித்தார். அதில் எனது அக்கா மயங்கி விழுந்துவிட்டார். எங்களது சத்தம் கேட்டு உள்ளே இருந்த எனது அப்பாவும், அம்மாவும் வெளியே வந்த போது எதிரி ராஜ்குமார் அருவால் கொண்டு எனது அப்பாவின் தலையின் நடுவிலும், வலது இடது பக்கங்களிலும் ஓங்கி வெட்டிவிட்டார். தடுக்க வந்த எனது அம்மாவை விக்னேஷ் என்பவர் ஓங்கி அருவால் கொண்டு தலையின் நடுவில் வெட்டிவிட்டார். அவர்கள் இருவருக்கும் தலையில் இரத்தம் வடிந்து வந்தது. எனது அம்மா மயங்கி விழுந்துவிட்டார். ஹரிஹரன் என்பவர் கட்டையால் எங்கள் நான்கு பேரையும் மாறி மாறி அடித்தார். எனது

தங்கையை முதுகிலும், காலிலும் மாரி மாரி அடித்தார்கள். அவருக்கு உள்காயம் ஏற்பட்டது. மகாலிங்கம் சொல்லி தான் ஹரிஹரன் கட்டையால் அடித்தார். நாங்கள் யாரும் குடும்பத்தோடு உயிரருடன் இருக்க கூடாது என்று மிரட்டினார்கள். மேலும், குச்சிகாரி, தேவிடியா, கூட்டி கொடுத்த குடும்பம் என்று காமகுரோதமாக திட்டினார்கள். அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் வந்த உடன் எதிரிகள் ஓடிவிட்டார்கள். பக்கத்தில் உள்ள பிரகாஷ் என்பவர் கார் வைத்திருந்தால் அவரை நான் அழைத்து வந்து எனது தங்கை, பெற்றோர்கள் மற்றும் என்னை அந்த காரில் ஏற்றி மருத்துவ மனைக்கு அழைத்து சென்றேன். மருத்துவ மனையில் போலீசார் வந்த விசாரணை செய்தார்கள். புகார் வாக்குமூலத்தை எனது தங்கை தான் கொடுத்தார். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான இரும்பு பைப்பினை எதிரி மகாலிங்கம் பயன்படுத்தியது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான சின்ன அருவாளை விக்னேஷ்ம், பெரிய அருவாளை ராஜ்குமாரும் பயன்படுத்தியது ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை
முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,
முதன்மை சார்பு நீதிபதி

அ.சா. 4 தேதி.21.11.2023

| SC. No. | 32/2023 | | |
|---|---|---|---|
| பெயர் | சரஸ்வதி | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

(1, 3, 4 எதிரிகள் ஆஜர். 2ஆம் எதிரி ஆஜர் இல்லை. அவருக்கு கு.வி.மு.ச பிரிவு 317–ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்படுகிறது).

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

நான் கழுகாணிமுட்டம், பாடாசாலை தெருவில் வசித்து வருகிறேன். நான் வீட்டு குடித்தனம் செய்துவருகிறேன். சாட்சிகள் வைத்தியநாதன் எனது கணவர். சாட்சி சுபாஸ்னி, வேம்பு எனது மகள்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளையும், 2ஆம் எதிரியும் எனக்கு தெரியும். 14.09.2021 அன்று காலை எனது அம்மாவிற்கும் எங்கள் வீட்டின் எதிர் வீடு பாலகிருஷ்ணன் மனைவி கலாவதி என்பவருக்கும் குப்பை கொட்டுவது சம்பந்தமாக காலையில் பிரச்சனை வந்தது. அது பேச்சு வார்த்தையில் முடிந்தது. பின்னர் அன்று மாலை 4.30 மணியளவில் பாலகிருஷ்ணன் மகன் மகாலிங்கம் அவரது 4, 5 நண்பர்களை அழைத்து வந்து எங்கள் வீட்டு வெளிபுற கேட்டை உதைத்து உள்ளே வந்து வீட்டு வாசலில் இருந்த எனது பெரிய மகளை மகாலிங்கம் இரும்பு பைப்பால் தலையில் அடித்தார். பின்னர் அவரது காலில் அடித்தார். மகாலிங்கம் அசிங்கமாக பேசிக் கொண்டிருந்த சத்தம் கேட்டு உள்ளே இருந்த நானும் எனது கணவரும் வெளியே வந்த போது மகாலிங்கம் சொல்லி எதிரி ராஜ்குமார் அருவால் கொண்டு எனது கணவரின் தலையில் இரு இடங்களில் ஓங்கி வெட்டிவிட்டார். தடுக்க வந்த என்னை மகாலிங்கம் சொல்லி விக்னேஷ் என்பவர் ஓங்கி அருவால் கொண்டு தலையின் நடுவில் வெட்டிவிட்டார். எங்கள் இருவருக்கும் தலையில் இரத்தம் வடிந்து வந்தது. நான் மயங்கி விழுந்துவிட்டேன். எனக்கு யார் எங்களை மருத்துவ மனைக்கு அழைத்து சென்றார்கள் என்று மயங்கி இருந்ததால் தெரியவில்லை. நான்கு நாட்கள் ஆகியும் எனக்கு மயக்கம் தெரியவில்லை. எனக்கு மயக்கம் தெரிந்து நான் பார்த்த போது திருவாரூர் அரசு மருத்துவ மனையில்

இருந்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான இரும்பு பைப்பினை எதிரி மகாலிங்கம் பயன்படுத்தியது ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் தடய பொருளான சின்ன அருவாளால் தான் விக்னேஷ் என்னை வெட்டினார். பெரிய அருவாளை ராஜ்குமாரும் பயன்படுத்தியது ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை செய்யவில்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.